# இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் குறித்த வியாபாரத் தொகுதிக்குள் உள்ளடங்குவதுடன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு (LKAS) இணங்க 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் காட்டும் கூற்று அந் நியமங்களிலிருந்து புறம்பானவையாக இருந்தது.

#### 1.2. நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதிலான தாமதம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இரண்டு மாத காலதாமதத்தின் பின்னர் 2013 மே 08 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறைப் பொறுப்புகளுக்குள் உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 90,872,046 தொகையான வங்கி மேலதிகப்பற்று நடைமுறைச் சொத்துக்களிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 05 வருட கால எல்லைக்காக கூட்டுத்தாபனத்தால் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளில் விற்பனை நிலையங்களை ஸ்தாபிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த கிரயம் மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்தின் பெறுமதி ரூபா 27,276,238 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போதான நிதிநிலைமைக் கூற்றில் ஊழியர் பணிக்கொடை ரூபா 7,762,590 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைகளும் இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 11,770,371 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் படியான மீதி | பட்டோலைகளின் படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | 9,197,861 | 1,435,271 | 7,762,590 |
| வியாபார கடன்கொடுத்தோர் | 231,717,220 | 235,725,001 | 4,007,781 |
| | | | 11,770,371 |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நீண்ட காலமாக செலுத்தப்பட வேண்டியிருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 235,725,001 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 25,326,266 தொகை 4 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலவிவரும் மீதியாகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் குளிரூட்டியை வாடகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 22,272,564 தொகையும் வெளித்தரப்பினரிடம் இருந்து ரூபா 7,799,229 தொகையுமாக ரூபா 30,071,793 கூட்டுத்தொகை கூட்டுத்தாபனத்திால் அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதியாகக் காணப்பட்டது. அத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் வைத்தியசாலைகளுக்கு மீன்கள் வழங்கப்பட்டமையால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூா 36,707,887 தொகை கடன்பட்டோர் மீதியாகக் காணப்பட்டது. அக் கடனை அறவிடுவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,013,502,501 பெறுமதியான பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பெறவேண்டிய கணக்குகள் | 382,069,023 | பட்டோலை |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | 473,753,650 | பட்டோலை |
| (இ) | நிலையான வைப்புக்கள் | 200,000 | வைப்புச் சான்றிதழ்கள் |
| (ஈ) | கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்கள் | 5,202,867 | பட்டோலை |
| (உ) | ஏனைய முதலீடுகள் | 110,376,603 | முதலீட்டுச் சான்றிதழும் பட்டோலையும் |
| (ஊ) | கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய மீதி | 17,363,485 | பட்டோலை |
| (எ) | ஏனைய நிறைவேற்றுனர்கள் | 24,536,873 | விபரமான பட்டோலை |
| | | 1,013,502,501 | |

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அடுத்து வரும் மாதத்தில் 20 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் |

| | | |
|---|---|---|
| | | நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2002 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 27,865,289 தொகையான வரித் தொகை 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டம். | குறித்த தினத்திற்கு பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்படாமையின் காரணமாக 2010/ 2011 ஆம் ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் ரூபா 1,843,905 தொகையான தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய 26/2010 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை யின் 3 ஆம் பந்தி | 2011 யூன் 01 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்னங்கீகாரம் இன்றி ஒப்பந்த அடிப்படையில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | |
| | (i) 8.3.9 ஆம் பிரிவு | வரிசை அமைச்சிடம் இருந்த இரு வாகனங்களுக்காக முறையே ரூபா 171,531 தொகையும் ரூபா 456,671 தொகையுமான எரிபொருள் செலவு மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 9.4 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தின் 13 உத்தியோகத்தர்கள் அமைச்சுக்களுக்கும் அலுவலகம் ஒன்றிற்கும் ஒரு நிறுவனத்திற்கும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளம், மேலதிக நேர வேலைப்படிகள், ஊழியர் சேமலாப |

| | | |
|---|---|---|
| | | நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பாக ரூபா 2,582,549 கூட்டுத்தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. |
| | (iii) 8.3.6 ஆம் பிரிவு | நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் செலவினம் தொடர்பாக பணிப்பாளர் சபையால் முகாமையாளர்களின் கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பின் கீழ் முறையான கட்டுப்பாட்டு முறையொன்று ஈடுபடுத்தப்பட்டிராமையின் காரணமாக பட்டியல்கள் முறையாக செலுத்தப்பட்டிராமையால் ரூபா 618,904 கூட்டுத்தொகையை மிகைக்கட்டணமாகவும் தண்டப்பண வட்டியாகவும் கூட்டுத்தாபனம் செலுத்தியிருந்தது. |
| (ஈ) | 2006 திசெம்பர் 18 ஆம் திகதிய டீஎம்எஸ்/சீ/3/ எப்ஏஆர்/8 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் IV ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுக்காக 2006 சனவரி முதல் உப படிகள் செலுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டிய போதிலும், பொறியியல் சேவைக்கான படிப்பணமாக ரூபா 180,000 கூட்டுதொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | ரூபா 1,847,413 பெறுமதியான கணனி மற்றும் கணனி மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்ளின் படி, மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 41,763,563 தொகையான

பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 68,969,869 ஆகக் காணப்பட்டது. இதன் படி மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 27,206,306 தொகையான பற்றாக்குறையில் வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்காக மீன்களின் விற்பனை, ஐஸ் விற்பனை மற்றும் டின்களில் அடைக்கப்பட்ட மீன்களின் விற்பனை அதிகரிப்பே முக்கிய காரணமாகியது.

## 2.2 செயற்பாட்டு நடவடிக்கைகளின் இலாபகரத்தன்மை

கூட்டுத்தாபனம் கடந்த பல வருட காலமாக தொடர்ந்து நட்டத்தை அடைந்திருந்ததுடன் ஒப்பீட்டு விபரம் பின்வருமாறாகும்.

| ஆண்டு | நட்டம் | கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நட்ட அதிகரிப்பு சதவீதம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | % |
| 2008 | (56.175) | 516 |
| 2009 | (103.889) | 85 |
| 2010 | (59.424) | (43) |
| 2011 | (68.970) | 16 |
| 2012 | (41.764) | (39) |

## 2.3 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

ஆக்கபூர்வமான நிறுவனமொன்றில் இருக்க வேண்டிய நடைமுறை விகிதம் 2:1 ஆன போதிலும், கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதம் 0.66:1 ஆன காரணத்தினால் தொழிற்பாட்டு மூலதனச் சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. இதற்கு முக்கியமாக வங்கி மேலதிகப்பற்று நிலவியமை, குறுங்காலக் கடன் பாரியளவில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் செலுத்தப்பட வேண்டியிருந்த வியாபார மற்றும் ஏனையவை பாரிய தொகையைக் கொண்டிருந்தமை முக்கிய காரணமாகியிருந்தது. கூட்டுத்தாபனத்தில் இருக்க வேண்டிய திரவச் சொத்து விகிதம் 1:1 ஆக இருக்க வேண்டிய போதிலும் இது 0.5:1 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த 8 நடைமுறைக் கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் நீண்டகாலமாக செயற்பாடற்றுக் காணப்பட்ட மீதி ரூபா 789,771 ஆகக் காணப்பட்டது. இச் செயற்பாடற்ற கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் எடுத்திருக்கவில்லை.

### 3.2 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்திடம் இருந்த ரூபா 954,950 கிரயமான தொழிநுட்பக் கோளாறிற்கு உட்பட்டிருந்த ஒரு வாகனம் 04 ஆண்டு காலமாக பழுதுபார்க்கப்படாது கூட்டுத்தாபன வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாளாந்த விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிராத பணம் ரூபா 90,096 தொகையானதுடன் அப் பணத்தை அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 72,540 பெறுமதியான மின் உபகரணங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள இரு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 336,000 தொகையான படிப்பணம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மீன்களின் கொள்வனவும் விற்பனையும்

(ஆ) கொடுப்பனவுக் கட்டுப்பாடு

(இ) வருமானச் சேகரிப்பு

(ஈ) கணக்கீடு

(உ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஊ) பதவியணி கட்டுப்பாடு